ஸ்ரீ:

ப்லவ ஹூ பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2022

மலர்: 4
இதழ்: 12

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





**MONTHLY NEWSLETTER FROM:**

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





அன்னகூட உத்ஸவம்

ப்லவ ஷு பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2022

மலர்: 4
இதழ்: 12

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஆஞ்ஜநேயர் விஷயமான ஒரு த்யான ச்லோகத்தில், ‘கோஷ்பதீக்ருத வாராசிம்’ (கடலைக் குளப்படியாக்கியவர் – அதாவது பெரியதைச் சிறிதாக ஆக்கிய) என்போம். அதுபோல, ‘கொரோனா’ பிரச்சினையையே சிறிதாக்கிவிட்ட "Exam" கவலையே இன்றைய சூழ்நிலையில் நாம் எதிர்கொண்டிருப்பது. பள்ளியில் ஓதும் சிறார் முதல் பெற்ற தாய்-தந்தையர் வரை கவலைப்படும் ஒரு விஷயம் இதுதான்.

இக்கவலையை நீக்க ஆசார்ய வள்ளல் ஒரு எளிதான உபாயம் அருளுகிறார், ‘‘படத ஹயக்ரீவ ஸம்ஸ்துதிம் பக்த்யா’’ (துரகவதனனைத் துதிக்கும் பாடலான ‘ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை’ உள்ளன்போடு படியுங்கள்) என.

இதனை உபதேசிப்பவர் அவர் அநுஷ்டித்தாரா என ஐயம் வேண்டாம் – அந்த ஸ்தோத்ரத்தின் துவக்கத்தில் ‘ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே’ (அனைத்துக் கல்விக்கும் ஆதாரமான ஹயவதநனை உபாஸிக்கிறேன்’) என்றுதானே தொடங்கினார்.

இதனை நன்கு அறிந்த அறங்காவலர்கள், ‘‘வித்யா நிதியான’’ நம் மயிலை வேதாந்த தேசிகனுக்கு எப்போதும் அருள்பாலித்து வீற்றிருக்கும் லக்ஷ்மீ-ஹயக்ரீவர்க்கு, வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை மஹோத்ஸவம் ஒன்றை மார்ச் 5-6 தேதிகளில் சிறப்புற நடத்தினர். உரிய காலத்தில் செய்த இச்செயலினால் பயன் பெற்ற மாணாக்கர்களும், நிம்மதிப் பெருமூச்சுவிட்ட பெற்றோர்களும், கணக்கிலடங்கா. அனைவர்க்கும் நாமும் "Best of Luck" சொல்லி ஆசாஸிக்கிறோம். இந்த உத்ஸவத்தின் நிழற்படங்களை இம்மாத ஸஞ்சிகையில் கண்டு களியுங்கள்.

விசேஷக் கட்டுரைகளுடன், இந்த இதழில் இடம் பெறும் வண்ணப்படங்கள் கீழ்க்காணும் உத்ஸவங்களிலிருந்து...

✓ தவனோத்ஸவம்

✓ மாசி-பௌர்ணமி ஸமுத்ர ஸ்நானம் புறப்பாடு

✓ லக்ஷ்மி ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை மஹோத்ஸவம்

✓ அன்னகூட உத்ஸவம்

கண்டு, வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

# Sripatham Association's Platinum Jubilee

## FROM THE DESK OF TRUSTEES

'Panguni', the last month of the year, is known as 'Phalguna' in Sanskrit. Arjuna was born in this month and, for this reason, he is referred as 'Phalguna'. Ugaadi, the new year day in the Lunar cycle-based calendar, falls during the month. The most significant occasion for Srivaishnavas in this month is Panguni-Uttharam when Bhagavath Ramanuja first submitted his Gadhya-Thrayam at the feet of Namperumal and Periya Piraatti during Serthi Utsavam.

Panguni-Uttharam is celebrated with devotional fervour at our temple and devotees are blessed with the opportunity to have Darshan of Perumal, Thayar and Andal on the same stage (Serthi) at Thayar Sannidhi. Another important festival of the month is Sri Rama Navami, a 10-day Utsavam here.

It is heartening that religious activities at temples have resumed at a full tilt following withdrawal of the restrictions imposed due to the pandemic. However, wearing the mask is safe for the good health of one and all. We once again thank the Kainkaryaparas of our temple, Vedaparayaba Sabha, Sripatham Kainkaryam Association, Ubhayadars and donors for their exemplary understanding and cooperation during the difficult times.

The Devasthanam has organised a special 'Danvantari Homam' to be held at the temple on March 20, 2022, for the wellbeing and good health of devotees (details on back cover).

During Maasi, the unique Annakoota Utsavam, featuring a special Thirumanjanam to the Divya Dampathis and Swami Desikan and a grand Thiruveethi Purappadu and inside Purappadu with Thayar, were held in a grand manner. Plenty of sumptuous Prasadams were offered to the Divya Dampathis and the Acharyan and distributed to the devotees. A large number of Adhyapaka and Vedaparayana scholars participated in the evening procession. The highlight of the Utsavam was the presence of HH Srirangam Srimad Andavan Varaha Mahadesikan during the Satrumurai after Thirumanjanam.

The Devasthanam, as well as the Annakoota Utsavam Trust, accorded special honour to Srimath Andavan and offered Sambavana to HH and his Kainkaryaparas.

The three-day Davanotsavam was celebrated with music concerts on each day and Maasi-Pournami Theerthavaari (Samudra Snanam) was held on the final day. Sri Hayagriva Vidya Abhivrutthi Sankalpa Archanai, Thirukkachi Nambigal and Kulasekhara Azhwar Satrumurai were the other important Utsavams held during the month.

We are glad to note that the **Srivaishnava Sripatham Kainkaryam Association**, affiliated to our temple, is completing 75 years of Sripadham service at the temple. In recognition of the commendable service, the Board has acceded to the Association's request to sponsor and organise special programmes, including a grand Thiruveethi Purappadu, in commemoration of the **Platinum Jubilee** year during the end of March (write-up on Page 6). ❋

ஶ்ரீ:

# ப்லவ வருட பங்குனி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் / ஏப்ரல் | பங்குனி | | | | | |
| 15 03 22 | 1 | த்வாதசி | செவ்வாய் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 16 03 22 | 2 | த்ரயோதசி | புதன் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 17 03 22 | 3 | சதுர்தசி | வியாழன் | பூரம் | ஆண்டாள் | |
| 18 02 33 | 4 | பௌர்ணமி | வெள்ளி | உத்தரம் | பங்குனி உத்தரம் – காலை – பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம் – மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு பின்பு தாயாருடன் பத்தி உலாத்தல் – இரவு திருக்கல்யாண உத்ஸவம், சேர்த்தி ஸேவை | ஶ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 19 03 22 | 5 | ப்ரதமை | சனி | ஹஸ்தம் | ஊர்கோல உத்ஸவம் – மாலை – பெருமாள், தாயார், ஆண்டாள் பத்தி உலாத்தல் பின்பு பெருமாள், ஆண்டாள் திருவீதி புறப்பாடு | ஶ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 20 03 22 | 6 | த்விதீயை | ஞாயிறு | சித்திரை | மதுரகவியாழ்வார் | |
| 21 03 22 | 7 | த்ருதீயை | திங்கள் | ஸ்வாதி | காலை: லக்ஷ்மி நரசிம்ஹர் திருமஞ் சனம். மாலை: ஆஸ்தானம். | |
| 22 03 22 | 8 | சதுர்த்தி / பஞ்சமி | செவ்வாய் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 23 03 22 | 9 | ஷஷ்டி | புதன் | அநுஷம் | ஶ்ரீ நாதமுனிகள் | |
| 24 03 22 | 10 | ஸப்தமி | வியாழன் | கேட்டை | தொண்டரபொடியாழ்வார் | |
| 25 03 22 | 11 | அஷ்டமி | வெள்ளி | மூலம் | பெருமாள், தாயார்மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை: தாயார் உள் புறப்பாடு | ஶ்ரீ S. பாலாஜி |
| 26 03 22 | 12 | நவமி | சனி | பூராடம் | ஸேனைநாதன் | |
| 27 03 22 | 13 | தசமி | ஞாயிறு | உத்தராடம் | ஆளவந்தார் | |
| 28 03 22 | 14 | ஏகாதசி | திங்கள் | ச்ரவணம் | பெருமாள், தேசிகன் திருமஞ்சனம், மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஏகாதசி: ஶ்ரீ S. பாலாஜி. ச்ரவணம்: ஶ்ரீமதி வசந்த் ஷான்பாக் |
| 29 03 22 | 15 | த்வாதசி | செவ்வாய் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 30 03 22 | 16 | த்ரயோதசி | புதன் | சதயம் | காலை: பேயாழ்வார் திருமஞ்ஜனம், மாலை: வீதிபுறப்பாடு | ஶ்ரீவைஷ்ணவ ஶ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸியேஷன் |
| 31 03 22 | 17 | சதுர்தசி / அமாவசை | வியாழன் | பூரட்டாதி | திருமால்வடை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 04 22 | 18 | அமாவசை / ப்ரதமை | வெள்ளி | உத்தரட்டாதி | காலை: பெருமாள், தாயார் – மூலவர் – உத்ஸவர் திருமஞ்சனம். மாலை: பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள் புறப்பாடு | அமாவசை: ஸ்ரீ S.S. ராகவன். வெள்ளிக்கிழமை: ஸ்ரீ S. கோபால தேசிகன் |
| 02 04 22 | 19 | ப்ரதமை | சனி | ரேவதி | யுகாதி பண்டிகை. ஸ்ரீராம நவமி உத்ஸவம் 1ம் நாள்: காலை – பெருமாள் – உத்ஸவர் திருமஞ்சனம். மதியம்: பஞ்சாங்க படனம். மாலை: ராமர் திருமஞ்சனம் – பொழுதுடன் திரு ஆராதனம். பெருமாள் வீதி புறப்பாடு – ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | யுகாதி: ஸ்ரீ கோபால கிருஷ்ணன். பஞ்சாங்க படனம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸன். ராமர் உத்ஸவம்: ஸ்ரீ S. ஸுந்தரம் |
| 03 04 22 | 20 | த்விதீயை | ஞாயிறு | அச்வினி | ராமர் உத்ஸவம் 2ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி |
| 04 04 22 | 21 | த்ருதீயை | திங்கள் | பரணி | ராமர் உத்ஸவம் 3ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. கோபாலன் |
| 05 04 22 | 22 | சதுர்த்தி | செவ்வாய் | க்ருத்திகை | ராமர் உத்ஸவம் 4ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ M. சக்ரபாணி ஐயங்கார் குடும்பம் & C/o. ஸ்ரீ C. கேசவன் |
| 06 04 22 | 23 | பஞ்சமி | புதன் | ரோஹிணி | ராமர் உத்ஸவம் 5ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ K. ராமன் குடும்பத்தினர் |
| 07 04 22 | 24 | ஷஷ்டி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | ராமர் உத்ஸவம் 6ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. முரளிதரன் |
| 08 04 22 | 25 | ஸப்தமி | வெள்ளி | திருவாதிரை | ராமர் உத்ஸவம் 7ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ ராம்ப்ரசாத் பார்த்தஸாரதி |
| 09 04 22 | 26 | அஷ்டமி | சனி | புனர்வஸு | ராமர் உத்ஸவம் 8ம் நாள்: காலை – ராமர் திருமஞ்சனம். மாலை: ராமர் உள் புறப்பாடு. இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோகன் |
| 10 04 22 | 27 | நவமி | ஞாயிறு | புஷ்யம் | ராமர் உத்ஸவம் 9ம் நாள். ஸ்ரீராம நவமி. காலை – ராமர் – மூலவர் – உத்ஸவர் திருமஞ்சனம். மாலை: ராமர் வீதி புறப்பாடு. இரவு – ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | V.D.R. பண்டு – ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 04 22 | 28 | தசமி | திங்கள் | ஆயில்யம் | ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம். காலை – திருமஞ்சனம். மாலை: பொழுதுடன் ஆராதனம். பின்பு ராமர் வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.J. சுகுமார் |
| 12 04 22 | 29 | ஏகாதசி | செவ்வாய் | ஆயில்யம் / மகம் | காலை: பெருமாள் உத்ஸவர் திரு மஞ்சனம். மாலை: வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.V. கோபால தேசிகன் |
| 13 04 22 | 30 | த்வாதசி | புதன் | மகம் / பூரம் | திருமழிசையாழ்வார் | |

# ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் (Regd.) பவள விழா [1946 – 2022]

ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணன் அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருக்கும் திவ்யதேசங்களில் விசேஷமானதும், திருமயிலை திவ்யதம்பதிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் மற்றும் ஸ்வாமி தேசிகன் ஸேவை ஸாதித்தருளும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில், ஆண்டு முழுவதும் நடைபெறும் உத்ஸவாதிகளை ஸ்ரீவைஷ்ணவர்களைக் கொண்டே எழுந்தருளச் செய்ய, மயிலை திவ்யதம்பதிகள் மற்றும் நம் இராமானுசன் கடாக்ஷத்தால், 1946-ம் ஆண்டு சித்திரை திருவாதிரை நன்னாளில் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாத கைங்கர்ய சங்கம் துவக்கப்பட்டது.

இது மேலும் வளர்ச்சி அடைந்து 1958-ம் ஆண்டு பதிவு பெற்ற சங்கமாக நிறுவப்பட்டது. பின்பு தேவஸ்தான அதிகாரிகளின் விருப்பத்தின் பேரில், அலர்மேல்மங்காபுரத்தில் ஒரு குடியிருப்பை கட்டி சங்கத்திற்கு நிரந்தர வருவாய்க்கும் ஏற்பாடு செய்தனர். அந்த வருவாயில் ப்ரதி வருடம் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவத்தில் 7-ம் நாள் திருத்தேர் உத்ஸவம், ஸ்வாமி தேசிகன் திருஅவதார உத்ஸவம், ஸ்ரீ பேயாழ்வார் வார்ஷிக உத்ஸவம் (10 நாட்கள்) மற்றும் ப்ரதி மாதம் சதயத்தன்று ஸ்ரீ பேயாழ்வார் மாதாந்திர உத்ஸவமும் நடைபெற்றுவருகிறது .

மேலும் ப்ரதி வருடம் சிறுவர், சிறுமியர்களுக்கான திவ்யப்ரபந்த , ஸ்தோத்ரபாட போட்டிகள் வைத்து, வெற்றிபெறுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கி ஊக்குவித்து வருகிறோம்.

நமது சங்கத்தினால், ஸ்வாமி தேசிகனுக்காக ப்ரத்யேக கண்ணாடி அறையும் (1983), சங்கத்தின் 60-ம் ஆண்டு நிறைவு விழாவில் (2006) ஸ்ரீ பெருமாளுக்கு ஸ்வர்ணத்தாலான சயன மஞ்சமும், ஸ்வாமி தேசிகனின் 750-ம் ஆண்டு திருஅவதார உத்ஸவத்தில் (2018) ஸ்வர்ண ஸிம்ஹாஸனமும் ஸமர்ப்பிக்கப்பட்டது.

நமது சங்கத்தை ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் 'பக்ஷிராஜாக்கள்' எனும் பிருதத்தை திருவாய்மலர்ந்தருளி கடாக்ஷித்தாயிற்று.

இவ்வாறு படிப்படியாக உயர்ந்து, இன்றளவும் செம்மையாக நடந்துகொண்டுவரும் நமது சங்கம், இன்று 75 ஆண்டுகள் பூர்த்தியாகி தனது கைங்கர்யத்தை தொடர்ந்து வருகிறது. இச்சமயத்தில் நமது சங்கத்தின் பவள விழாவை வரும் 24.03.2022 முதல் 27.03.2022 வரை விமரிசையாக கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது (உத்ஸவ விவரங்களை பத்திரிகையில் காண்க). அதுசமயம் ஸ்ரீபேயாழ்வார் மூலவருக்கு ஸ்வர்ணத்தினாலான கவசமும் ஸமர்ப்பிக்க ஏற்பாடுகள் நடந்தேறி வருகிறது. ஆஸ்திகர்கள் பெருந்திரளாக மேற்படி உத்ஸவத்தில் அந்வயிக்க ப்ரார்த்திக்கிறோம்.

நமது சங்கத்தின் உறுப்பினர்கள் பல்வேறு உயர்பதவிகள் வகித்து வந்தாலும், பெருமாள், ஆசார்யன் கைங்கர்யமே ப்ரதானமாகக் கருதி இன்றளவும் அநன்ய ப்ரயோஜனமாய் கைங்கர்யம் செய்துவரும் பாங்கினையும் காணும்பொழுது நமது சங்கம் பலநூறு ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற மாமயிலை திவ்யதம்பதிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் மற்றும் ஸ்வாமி தேசிகனின் திருவடிவாரங்களில் ப்ரார்த்திக்கிறோம்.

**– ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் அங்கத்தினர்கள்**

ஸ்ரீ:

# பெருந்தேவி பெருமை பேசக் கற்றவன்

ஸ்ரீ உ.வே. பழவேரி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

**முன்னுரை:-** ‘தேவன் ஆயிரநாமமுடையவன்’ என்கிறது ஒரு ப்ரமாணம். இந்த ப்ரமாணத்தில் ‘ஆயிரம்’ என்கிற சொல் ‘கணக்கற்ற’ என்ற பொருளை உடையது. பகவான் எண்ணற்ற நற்குணங்களை உடையவனாதலால் அவற்றால் உண்டாக்கப்பட்ட திருநாமங்களும் கணக்கற்றவையாக அல்லவா இருக்கும்! கணக்கற்ற கல்யாணகுணங்களைக் கொண்ட திருமகளுக்கும் இது ஒக்கும். இக்கட்டுரையில் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு திருமகளின் திருநாமங்கள் இரண்டின் பொருளைச் சற்று அனுபவிப்போம்.

**முக்கியமான திருநாமங்கள்:-** எம்பெருமானுக்கு நாராயணன், வாஸுதேவன், விஷ்ணு என்ற திருநாமங்கள் முக்கியமானவை. இம்மூன்றிலும் நாராயணன் என்ற திருநாமமே முதன்மை பெற்றது. அவ்வாறே எம்பெருமாட்டியின் திருநாமங்களில் ஸ்ரீ: மற்றும் லக்ஷ்மீ என்ற திருநாமங்கள் முக்கியமானவை. இவை இரண்டிலும் ஸ்ரீ: என்கிற திருநாமம் முதன்மை பெற்றது.

**ஸ்ரீ: என்ற திருநாமத்தின் பொருள்:-** ஸ்ரீ: என்ற இத்திருநாமம் நாராயண நாமம் போலே பற்பல பொருளுடையது. ஆயினும் ஆறு பொருட்கள் மிகவும் முக்கியமாக ப்ரமாணங்களில் கூறப்பட்டுள்ளன. வினையால் அணையும் பெயரான இத்திருநாமம், கேட்பவள்-கேட்பிப்பவள்; அடைபவள்-அடைந்திருப்பவள்; (குற்றங்களைப்) போக்குபவள், பரிபக்குவத்தை ஏற்படுத்துபவள் என்ற ஆறு பொருள்களை உடையது. இவற்றை மிகவும் அழகாக ஸ்வாமி தேசிகன், ‘அருவுருவானவை தன்னை அடைந்திடத் தானடைந்து, வெருவுரை கேட்டு அவை கேட்பித்தகற்றும் வினை விலக்கி, இருதலை அன்புதனால் எமை இன்னடி சேர்த்தருளும், திருவுடனே திகழ்வார் செறிந்தார் எங்கள் சிந்தையுளே’ என்று **துயச்சுருக்கு** என்ற ப்ரபந்தத்திலும், ‘வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று தன்னடி சேர்ந்த தமருனை அணுக நின்றுடன் சேர்ந்து நிற்கும் நின்திருவே’ என்று **மும்மணிக்கோவை** என்ற ப்ரபந்தத்திலும்’ அருளிச்செய்துள்ளார்.

மேலும், இவ்வாறு பற்பல அபூர்வமான அழகிய ஆதாரமுடைய பொருட்களையும் **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில்** காட்டியுள்ளார். அவற்றில் இரண்டு விஷயங்களை மட்டும் காண்போம்.

1) ‘அனைவராலும் அடையப்படுபவளாய் எம்பெருமானை அடைந்திருக்கிறாள்’ என்பது மட்டுமின்றி ‘உலகை அடைகிறாள்’ என்றும் ‘எல்லா வஸ்துக்களாலும் ஆச்ரயிக்கப்படுகிறாள்’ என்ற பொருளும் ஸ்வாமியால் காட்டப்பட்டுள்ளது. இதனால் ‘ஸர்வாதாரத்வம்’ மற்றும் ‘ஸர்வவ்யாபித்வம்’ என்ற திருமகளின் பண்புகளும் காட்டப்பட்டன. இதற்கு ஆதாரமாக ‘பகவந்நாராயண’ என்ற சொல்லில் இடத்திலே ‘பகவதீம் ச்ரியம்’ என்ற சொல்லை ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ கத்யத்திலே பயன்படுத்தியுள்ளதைக் காட்டியுள்ளார்.

2) ‘கேட்பவள்-கேட்பிப்பவள்’ என்ற பொருளிலும் மூன்று வகையைக் காட்டியுள்ளார். ’அடியார்களின் கூக்குரல் கேட்டு எம்பெருமானை கேட்பிப்பவள்’ என்பது ஒன்று.



‘எம்பெருமானிடம் கேட்டதை மக்களை கேட்பிப்பவள்’ என்பது இரண்டாம். ‘எம்பெருமானிடம் கேட்டதை அவனையே தக்க ஸமயத்தில் கேட்பிக்கிறாள்’ என்பது மூன்றாவது பொருளாகும்.

**‘லக்ஷ்மீ’ என்ற திருநாமத்தின் பொருள்:-** ‘லக்ஷ்மீ’ என்கிற சொல் ‘லக்ஷ’ என்கிற வினைப்பகுதியில் இருந்து உண்டாகிறது. இவ்வினைப்பகுதிக்கு ‘நோக்குதல்’ மற்றும் ‘அடையாளம் இடுதல்’ என்ற பொருட்கள் தாதுபாடத்தில் படிக்கப்பட்டுள்ளன. இவற்றால் பெரிய பிராட்டியார் ‘நோக்குபவள் = ஸங்கல்பிப்பவள் = உலகைப் படைப்பவள்’ என்ற பொருள் கிட்டுகின்றது. இதனை ‘ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி ஒரு நினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய’ என்று தமிழ்பாவால் அருளிச்செய்தார். ஸ்ரீஸ்துதியிலும் ஏழாவது ச்லோகத்தில், ‘ஸர்வேச்வரனின் காதலியே! மறை அணங்குகள் நித்யஸூரிகள் திரளோடு கூட, நாற்புறங்களிலும் சூழ்ப்பட்டு, பற்பல ஸ்தான பேதங்களையுடை, பல வணங்கொண்ட ப்ரக்ருதியாகிற பலகையை இடையில் வைத்து, நீயும் எம்பெருமானும் எப்பொழுதும் ஒருமித்த

கருத்துடன் விளையாடும் விளையாட்டில் அயன் முதலோர் சொக்கட்டான் காயின் நிலையைப் பெறுகின்றனர்' என அழகாக அருளிச் செய்துள்ளார். பந்து ஆட்டத்தை சிறுவர்கள் ஆடுவது போல் எம்பெருமானுக்கு உலகைப் படைத்தல் முதலியன விளையாட்டாகும் என்று ப்ரமாணங்கள் கூற 'எம்பெருமானைக் கூறுமிடத்தெல்லாம் பிராட்டியையும் கூறிற்றாம்' என்றபடி இருவரும் விளையாடும் சொக்கட்டான் ஆட்டமாக விளக்கி அருளியது மிகவும் ரஸிக்கத்தக்கது. இந்த ச்லோகத்தின் சொற்கள் மற்றும் பொருட்களின் ஆற்றலையும் அழகையும் பெரியோர் உரை கொண்டு அனுபவிக்கப் ப்ராப்தம்.

இனி 'அடையாளமிடுதல்' என்ற வினைப்பகுதியின் பொருள்பட பரப்ரஹ்மத்திற்கு லக்ஷ்மியே அஸாதரண லக்ஷணம் என்பதை 'பவதீ பாதலாக்ஷா ரஸாங்கம் ஸ்புரதி - பரப்ரஹ்மம் நினது திருவடிகளின் செம்பஞ்சியை அடையாளமாகக் கொண்டு விளங்குகின்றது' என்று அருளிச் செய்துள்ளார்.

'லக்ஷ' என்ற வினைப்பகுதிக்கு 'விளங்கச் செய்தல்' என்ற பொருளும் உளது என்பதை மஹாபாஷ்யத்தால் அறியமுடிகின்றது. இதை, 'திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார்' என ஸ்வாமி நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியும் உறுதிப்படுத்துகின்றது. இதைத் திருவுள்ளம் பற்றி 'பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா - மதுசூதனின் மார்பை தனது ஒளியினால் அலங்கரிப்பவள்' என்று வெளியிட்டருளினார்.

**முடிவுரை:-** இங்ஙனம் ஸ்ரீஸூக்தம் முதலாக ஆழ்வார் ஆசார்யர்கள், இதிஹாஸ புராணங்களில் கூறப்பட்டுள்ள பெரியபிராட்டியாரின் பெருமையை ஒன்று விடாமலும் பற்பல ஆரய்ச்சியுடன் கூடிய ஆழ்பொருட்களையும் பற்பல திவ்யஸூக்திகளில் வெளியிட்டுள்ள ஸ்வாமி தேசிகனை 'பெருந்தேவி பெருமை பேசக் கற்றவன்' என்பது மிகையன்று. இதற்கு இக்கட்டுரை 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்றபடி இயற்றப்பட்டு ஸ்வாமி தேசிகனின் திருவடிகளில் ஸமர்பிக்கப் பட்டது.

---

# திருமகள் கிளிகண்ணி

**ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு**

1. பாற்கடலைக் கடையும்போது
தோற்றம்கொளும் எத்தனையோ?
அத்தனையும் இவளுக்கொப்போ கிளியே!
அற்புதத்தின் அவதாரமே கிளியே!
பொற்பதுமத் தாயே! தாயே!

2. முந்திநின்ற தேவரெல்லாம்
முழித்திட்டு நின்றிடவே
சிங்கனவன் மார்வடைந்தாள் கிளியே!
ஸ்ரீதரனைத் தெளிவித்தளே கிளியே!
சீர்திருவே தாயே! தாயே!

3. உலகுயிர்தான் காப்பதற்கு
உத்தமனும் யாகம்செய்ய
பத்தினியாய் உடனிருப்பாள் கிளியே!
பத்தரெல்லாம் பிழைத்திடவே கிளியே!
முத்திதரும் தாயே! தாயே!

4. மறையிருக்கும் மாதவனை
முறையறிந்து சேரமக்கள்
குறைகளையே மாற்றிடுவாள் கிளியே!
நிறைகாட்டி நிற்கவைப்பாள் கிளியே!
நிறைநிற்பள் தாயே! தாயே!

5. சொல்லும்குறை கேட்டுப்பின்னர்
சொல்வள்அந்த செல்வனார்க்கு
அல்லலெல்லாம் தீர்த்திடுவாள் கிளியே!
அந்தாமமே தந்திடுவாள் கிளியே!
அம்புயத்தாள் தாயே! தாயே!

6. நாமெல்லாம் நாடநின்றாள்
நமக்காகப் பரிந்துரைப்பாள்
நம்மையவன் அடிமைகொள்வான் கிளியே!
இங்குமங்கும் வாழ்ந்துநிற்போம் கிளியே!
எங்கும்நிறை தாயே! தாயே!

7. அகலகில்லேன் இறையும்மென்று
அரியவனின் மார்வுநின்று
அவன் அவதாரம் கொண்டால் கிளியே!
அன்புத்துணை ஆகிவந்தாள் கிளியே!
அருளுடைத்தள் தாயே! தாயே!

8. ஆயிரந்தான் நாமமுண்டே
அதிலழகு ஸ்ரீயென்றாடு
அனுபவித்தர் நம்குருக்களே கிளியே!
அவர்வழியில் நாம்துதித்தோம் கிளியே!
அல்லலேது தாயே! தாயே!

9. புகழ்செல்வம் கல்வியெல்லாம்
அகமிருத்த விரைந்தருள்வாள்
திருவுடைத்து நாமும்நிற்போம் கிளியே!
திருமாலும் நம்வசமே கிளியே!
திருமகளே தாயே! தாயே!

10. தத்துவத்தில் ஒன்றாய் நின்று
காப்பதிலே பகிரும் பாங்கை
அடியார்க்கடியான் இட்டான் கிளியே!
படிப்போர் பதம்சேர்வரே கிளியே!
கொடுப்பது தாயே! தாயே!



தவனோத்ஸவம்





தவனோத்ஸவம்






தவனோத்ஸவம்







மாசி - பௌர்ணமி ஸமுத்ர ஸ்நானம் புறப்பாடு









மாசி - பௌர்ணமி ஸமுத்ர ஸ்நானம் புறப்பாடு







ஸ்ரீ:












அன்னகூட உத்ஸவம்



கண்ணுக்கினியன

ஸ்ரீ:









அன்னகூட உத்ஸவம்











அன்னகூட உத்ஸவம்







ஸ்ரீ:

# ஸ்ரீரங்கராஜ மஹிஷீ

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

**மாம் ஏகம் சரணம் வ்ரஜ!, மா சுச:!** என்ற கீதாசார்யனின் திருவாக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆணிவேராகிறது. சரணாகத வத்ஸலனாம் எம்பெருமான் துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம் என்று இரண்டு பார்வைகளைக் கொள்ள, பிராட்டியோ காருண்யம் எனும் ஒரே ஸங்கல்பத்துடன் சேதனம் அசேதனம் என்று அனைத்தையும் கடாஷிக்கிறாள். எம்பெருமானிடத்தே புருஷகாரம் புரிந்து ப்ரபஞ்சத்தை ரக்ஷிக்கிறாள்.

புருஷகாரம், காருண்யம் என்பதெல்லாம் அனைவரும் அறிந்த பிராட்டியின் திருக்கல்யாண குணங்கள். இவையல்லாது ஸ்ரீகுணரத்னகோசம் எனும் தனது ஸ்ரீஸூக்தியில் பராசரபட்டர் ஸேவிக்கும் ஸ்ரீரங்கநாயகியின் திருக்கல்யாண குணங்களின் ப்ரபாவம் எல்லையில்லாதது. ஸ்ரீரங்கநாதனின் ஹ்ருதய கமலத்தே வாஸம் செய்பவளான ரங்கநாயகியை அவளது நாயகனின் முன் நின்று பராசரபட்டர் போற்றிப் புகழும் ச்லோகங்களின் தொகுப்பே ஸ்ரீகுணரத்னகோசம்.

மோக்ஷம் அனுகிரஹிக்கவல்ல சக்திமானாம் ஸ்ரீரங்கநாதனை ஆள்பவள் பிராட்டி. ஸ்ரீபராசரபட்டர் அவளை ரங்கநாயகி என்னாது **'ஸ்ரீரங்கராஜ மஹிஷீ'** என்கிறார். **மஹிஷீ** என்று உரைத்து அனைவருக்கும் ராஜனாகும் ஸ்ரீரங்கநாதனின் ப்ராணநாயகி அனைவருக்கும் அரசி என்பதை உணர்த்துகிறார். ஸ்ரீகுணரத்னகோசம் எனும் க்ரந்தத்தில் பராசரபட்டர் காண்பித்தருளும் ஸ்ரீரங்கநாயகியின் திருக்கல்யாண குணங்களில் அந்வயித்து அவளடி பற்றி அவனடி சேர்வோம்.

**எம்பெருமானின் ஸ்ருஷ்டியை அங்கீகரிக்கும் பிராட்டி:**

*ச்ரியை ஸமஸ்த சிதசித் விதாந வ்யஸனம் ஹரே:*
*அங்கீகாரிபி: ஆலோகை: ஸார்த்தயந்த்யை க்ருத: அஞ்ஜலி:*

சேதன, அசேதனங்களை ஸ்ருஷ்டித்த பின்னர், தனது ஸ்ருஷ்டி கார்யத்தினால் பயனேதும் உண்டா என்று வ்யஸனம் கொள்கிறான் எம்பெருமான். பிராட்டியானவள் **'அங்கீகாரிபி: ஸார்த்தயந்த்யை'** — தனது நாயகனின் ஸ்ருஷ்டி கார்யத்தினை அங்கீகரித்து. ஆமோதித்து அவற்றைப் பயனுள்ளதாக்குகிறாள். எம்பெருமான் ஸ்ருஷ்டித்தவைகளை பிராட்டி தனது திருநேத்ரங்களின் ஸமிஜ்ஞைகள் மூலம் உணர்த்துகிறாள் என்பதை **'ஆலோகை:'** என்ற பதம் குறிக்கிறது. எம்பெருமானின் ஸ்ருஷ்டியாகவே இருப்பினும் பிராட்டியின் கடாக்ஷம் இருந்தால் மட்டுமே அவை சோபிக்கின்றன என்பதை பட்டர்



தெளிவுற விளக்குகிறார். இப்படிப்பட்ட பராக்ரமம் உள்ளவளான பெரிய பிராட்டிக்கு ப்ரணாமங்கள் — **'க்ருத: அஞ்ஜலி:'**

**உபேயமாகும் திருவடிகளை அடைய உபாயமாகிறாள்:**

*உல்லாஸ பல்லவிதபாலித ஸப்தலோகீ*
*நிர்வாஹ கோரகித நேம கடாக்ஷ லீலாம்*
*ஸ்ரீரங்க ஹர்ம்யதல மங்கள தீப ரேகாம்...*

ஸ்ரீரங்கநாதனின் விமானத்தில் ('ஹர்ம்யதல') மங்கள தீபமாக ('மங்கள தீப ரேகாம்') ஒளிர்வது ஸ்ரீரங்கமஹிஷீ. அப்படி ஒளிர்ந்து ஆச்ரிதர்கள் அடைய வேண்டிய உபேயமென ஸ்ரீரங்கநாதனை அவர்தமக்குக் காண்பித்துக் கொடுத்து, தானே அவனை அடைவதற்கான உபாயமுமாகிறாள்.

**ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் அனைத்திற்கும் காரணகர்த்தா அவளே:**

பெரிய பெருமாள் இவள் பக்கம் தனது பார்வையினைத் திருப்ப, **'கோரகித நேம கடாக்ஷ லீலாம்'** ஒரு அரும்பு மலர்வதைப் போல பிராட்டி தனது நேத்ரங்களை மெதுவாகத் திறப்பாளேயானால், அவன் ஸப்த லோகங்களையும் ஸ்ருஷ்டிக்கிறான். இவள் தனது நேத்ரங்களை மூடிக் கொண்டாலோ அவன் இந்த ப்ரபஞ்சத்தினை ப்ரளயத்தில் மூழ்கடிக்கின்றான். ரங்கநாச்சியாரின் கடாக்ஷமானது ஸ்ருஷ்டிக்கப்பட்ட அனைத்தையும் ரக்ஷிக்கிறது. இப்படி ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்று அனைத்திற்கும் காரணகர்த்தாவாக இருப்பது பிராட்டியே.

**ஸ்ரீரங்கநாதனின் ப்ரகாசத்திற்குக் காரணமானவள் அவளே:**

*அநுகல தநுகாண்ட ஆலிங்கநாரம்பசும்பத்*
*ப்ரதிதிச புஜசாக ஸ்ரீஸக அநோகஹருத்தி:*

இங்கு **'ஸ்ரீஸக'** என்று கூறி ரங்கநாச்சியாரை முன்னிட்டு ரங்கராஜனை அடையாளம் காட்டுகிறார்

பட்டர். ஸ்ரீயின் நாதனாக, ஸகாவாக இருப்பதனாலேயே இவள் மூலமாக அவனது திருக்கல்யாண குணங்கள் பரிமளிக்கின்றன. அவனது ப்ரகாசத்திற்கும் இவள் அவனது ஸகியாக இருப்பதே காரணம் என்கிறார்.

**ஸ்ரீரங்கநாயகி ஸங்கல்பிப்பதை ஸ்ரீரங்கநாதன் செய்கிறான்:**

**'யத் ப்ரூ பங்கா: ப்ரமாணம்'** என்று தொடங்கும் ச்லோகத்திலோ எந்த ஜீவன்களை எவ்வித குணாதிசயத்துடன் ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்று தனது புருவ நெளிப்பின் மூலம் எம்பெருமானுக்கு உணர்த்துவதே பிராட்டி தான் என்று ஸாதித்து, ஸ்ருஷ்டி கார்யத்தின் அஸ்திவாரமே அவள் தான் என்று அடிக்கோடிடுகிறார். ''ப்ரமாணம்'' என்ற பதத்தினை இங்கு ப்ரயோகித்து, ரங்கமஹிஷியின் ஸங்கல்பம் இன்றி அவளது நாயகன் எதையும் செய்வதில்லை என்பதை உணர்த்துகிறார். ஸ்ரீரங்கமஹிஷியின் ஸங்கல்பத்தினை அவளது புருவ நெளிப்பினில் கண்டு கொண்டு ஜீவன்களை உயர்ந்த ஞானம் உள்ளவர்களாகவோ ஞானஹீனர்களாகவோ எம்பெருமான் ஸ்ருஷ்டிக்கிறான். இப்படிப்பட்ட பராக்ரமம் கொண்டவள் புகழ் பாட வேதங்களே அஞ்சி ஒதுங்குகின்றன.

வேதங்களே அவளது அளவிடமுடியாத கீர்த்தியினைப் பேச இயலாது ஒதுங்கி கொள்ள, குற்றம் குறைகளுடன் தான் ஸேவிப்பதை ஸ்ரீரங்கமஹிஷி பொறுத்துக் கொள்வது, அவள் தயாஸாகரம் என்பதைக் காட்டுகிறது. ''சிறு ஞானத்தனாம் அடியேனது வாக்கினையும் அனுக்ரஹித்த ஸ்ரீரங்கநாச்சியாரின் ஔதார்ய குணத்தினை அளவிடத்தான் முடியுமா:'' என்று உருகுகிறார் பட்டர்.

**ஸ்ரீ குண ரத்னகோசம்:**

*தேவி ச்ருதிம் பகவதீம் ப்ரதமே புமாம்ஸ:*
*த்வத் ஸத் குண ஒக மணிகோச க்ருஹம் க்ருணந்தி*
*தத்த்வார பாடந படுநிச ஸேதிஹாஸ*
*ஸந்தர்க்கண ஸ்ம்ருதி புராண புரஸ்ஸராணி*

இந்த ச்லோகமானது, **ஸ்ரீ** - ஸ்ரீரங்கநாச்சியாரின் **குண** - திருக்கல்யாண குணங்கள் எனும் **ரத்னகோசம்** - உயர்ந்த கற்கள் கோர்க்கப்பட்ட அழகிய மாலையினை, ஸ்ம்ருதிகள் (சதுர் வேதங்கள்) தாமே பேழைகளாகி பொக்கிஷமென பாதுகாக்கின்றன – **''த்வத் ஸத் குண ஒக மணிகோச க்ருஹம்''**. சதுர் வேதங்களும் பெரிய பெருமாளைத் தொழுதேற்றுவது போல் இருந்தாலும், அவை கொண்டாடுவது அகலகில்லேன் என்று ஸ்ரீரங்கநாதனின் திருமார்பினை அலங்கரிக்கும் ரங்கநாச்சியாரையே.

**ஸ்ரீரங்கமஹிஷியின் திவ்ய கடாக்ஷம்:**

*ஆஹு: வேதாந் அமாநம் கதிசந கதிசா ராஜகம் விச்வம் ஏதத்*
*ராஜந்வத் கேசித் ஈசம் குணிநம் அபி குணை: தம் தரித்ராணம் அந்யே*
*பிக்ஷெள அந்யே ஸு ராஜம்பவம் இதிச ஜடா: தே தலாதலி அகார்ஷு:*
*யே தே ஸ்ரீரங்க ஹர்ம்ய அங்கண கநகலதே நக்ஷணம் லக்ஷ்யம் ஆஸந்*



அடுத்து வரும் ச்லோகத்தில் **'ஸ்ரீரங்க ஹர்ம்ய அங்கண கநகலதே'** - ஸ்ரீரங்க விமானத்தில் தங்கக்கொடியென மின்னுபவள் ரங்கபிராட்டியே. வேதங்களை தூஷிப்பவர்களும் ஸ்ரீரங்கநாதனின் திருவடி பணியாது இதர தேவதாந்த்ரங்களை பரப்ரஹ்ம ஸ்வரூபமென நம்புபவர்களும் ஸ்ரீரங்கநாச்சியாரின் கடாக்ஷம் க்ஷணார்த்தமும் (**''நக்ஷணம் லக்ஷ்யம்''**) கிடைக்காததனாலேயே இப்படிப்பட்ட கார்யங்களில் ஈடுபடுகிறார்கள். இத்தகைய தெளிவற்ற புத்தியினை உடையோர்க்கு ஸ்ரீரங்கமஹிஷியின் கடாக்ஷம் ஒரே ஒரு க்ஷணம் வாய்த்திருந்தாலும் பெரியபெருமாளின் ப்ரபாவம் அறிந்து கரை சேர்ந்திருப்பர். தெளிந்த ஞானத்தினையும் பக்தியினையும் பெறுவதற்கு ரங்கநாச்சியாரின் கடைக்கண் பார்வை அவச்யமாகிறது.

*ஆகுக்ராம நியாமகாத் அபி விபோ: ஸர்வ நிர்வாஹகாத்*

*ஐச்வர்யம் யத் இஹ உத்தரோத்தர குணம் ஸ்ரீரங்கபர்த்து: ப்ரியே*
*துங்கம் மங்களம் உஜ்ஜ்வலம் கரிமவத் புண்யம் புந: பாவநம்*
*தந்யம் யத் தத் அதச்ச வீக்ஷணபுவ: தே பஞ்ச ஷா விப்ருஷ:*

இதில் 'ஸ்ரீரங்கபர்த்து: ப்ரியே' என்ற பதங்களின் மூலம் ஸ்ரீரங்கநாதனுக்கு ப்ரியமானவள் அவனது மஹிஷி என்கிறார். 'துங்கம் மங்களம் உஜ்ஜ்வலம் கரிமவத்

புண்யம் புந: பாவநம் தந்யம்' என்று பலவிதமான குணங்களை உடையவற்றை ஸ்ருஷ்டிப்பது ஸ்ரீரங்கநாதனாக இருக்கலாம். அப்படி ஸ்ரீரங்கநாதனால் படைக்கப்பட்ட விஷயங்களை அனுபவிக்க உனது கடாக்ஷம் அவச்யமாகிறது அன்றோ. உனது கடாக்ஷம் இல்லாது போனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட அனைத்தும் வ்யர்த்தம் ஆகிறது. அவனது ஸ்ருஷ்டி கார்யத்திற்கு அர்த்தம் தருவதனால் ஸ்ரீரங்கராஜனின் ப்ரியஸகி நீ.

*ஏக: முக்தாதபத்ர ப்ரசல மணி கணாத்காரி*
*மௌளி: மநுஷ்ய:*
*த்ருப்யத் தந்தாவளஸ்த: ந கணயதி நதாந் யத்*
*க்ஷணம் க்ஷோணி பாலாந்*
*யத் தஸ்மை திஷ்டதேந்ய: க்ருபணம் சரண:*
*தர்சயந் தந்த பங்க்தீ*
*தத் தே ஸ்ரீரங்கராஜ ப்ரணயிநி நயந: உதஞ்சி*
*த நயஞ்சிதாப்யாம்*

முதல் மூன்று வரிகள் மூலம் செல்வந்தன் ஒருவன் விலை உயர்ந்த ரத்னங்கள் பதித்த முத்தினாலான குடை பிடித்தபடி யானை மீது வலம் வருவதையும், மற்றொருவனோ அப்படி யானை மீது வருபவனைப் பார்த்துப் பல்லிளித்து தனது வறுமை நிலைமையினை அவனுக்குத் தெரிவிப்பதையும் விவரிக்கின்றார். ஸ்ரீரங்கநாயகியின் கடைக்கண் பார்வை கிடைத்ததனால் ஒருவன் செல்வந்தனாக யானை மீது உலா வருகிறான். அவளது திவ்ய கடாக்ஷம் கிட்டாததனால் மற்றொருவன் தாரித்ரியத்தில் சிக்கித் தவிக்கிறான். என்னே அவளது ப்ரபாவம்!

மத்ஸவித்ரீ! (என்னைப் பெற்ற தாயே) உன் கடாக்ஷத்தின் வேற்றுமையால் அன்றோ இந்த ப்ரபஞ்சத்தில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. பெரியபெருமாளை ஸ்ருஷ்டி கார்யம் செய்ய வைப்பவள் நீ. அப்படி அவன் செய்யுங்கால் உனது புருவ நெளிப்பால் அதனை சீர் செய்பவளும் நீ. அப்படி சீர் செய்த பின்னரும் மாத்ரு வாத்ஸல்யத்தினால் பெரியபெருமாளின் திருவடி பணிந்தோர் மீது உனது பார்வையினை வீசி ரக்ஷிப்பவள் நீ. உனது கடாக்ஷத்தின் ப்ரபாவத்திற்குதான் எல்லையுண்டோ!

இங்கு மஹாபலி சக்ரவர்த்தியின் வ்ருத்தாந்தத்தில் அந்வயித்து பெரியபிராட்டி பார்வையின் ஏற்றத்திற்குக் கட்டியம் கூறுகிறார் பட்டர்.

எம்பெருமான் மஹாபலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி யாசகம் கேட்டு வந்தபோதில் ''என்ன வேண்டுமோ கேளும். நீர் எதை யாசகமாக கேட்டாலும் தருவதற்கு நான் தயார்'' என்று கூறுகிறான். மஹாபலி சக்ரவர்த்தியிடம் இவ்வளவு ஐச்வர்யம் எப்படி வந்தது என்று யோசித்தானாம் வாமனனாக நின்ற எம்பெருமான். ப்ரம்மச்சாரி வேடம் பூண்டு வந்ததினால் அவன் தனது மார்பினை மறைக்கவில்லை. அதனால் தனது மார்பில் உறையும் பிராட்டியின் கடாக்ஷம் மஹாபலி சக்ரவர்த்தியின் மீது விழுவதனாலேயே அவனிடம் இவ்வளவு ஐச்வர்யம் உள்ளது என்று உணர்ந்த வாமனரூபி, உடனே அங்கவஸ்த்ரத்தினால் தனது மார்பினை மறைத்துக் கொண்டானாம். பிராட்டியின் கடாக்ஷம் தடைப்பட்டதனால் மஹாபலி சக்ரவர்த்தியினால் எம்பெருமான் கேட்ட மூன்றாவது அடியினைக் கொடுக்க முடியவில்லை என்று பிராட்டியினுடைய பார்வையின் மஹாத்ம்யத்தைக் கொண்டாடுகிறார்.

ஸ்ரீரங்கராஜனும் அவனது பட்டமஹிஷியும் ஏகஸ்வரூபம். மிதுனம். **அந்தாமரைப் பேதை** என்று ஆழ்வார் போற்றும் ஸ்ரீரங்கமஹிஷியிடம் சரண் புகுந்து, ச்ரிய: பதி - அவளது மணாளனான நம்பெருமாளின் ப்ரபாவத்தில் ஆழங்கால் படுவோம்.


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# தாமரையாள்தன் ஏற்றம்

ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு



நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் பெரிய பிராட்டியாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், எம்பெருமானாகிய விஷ்ணுவும் சேர்ந்த ஒரு இணையே பரதத்வம் என்று அழைக்கப்படுகிறது. இக்கருத்து, இந்த ஸித்தாந்தத்தில், உள்ள விசேஷங்களில் மிக முக்கியமானதாகும். இவர்களின் இந்த மிதுனமே (சேர்த்தியே), கைங்கர்யம் செய்வதற்கு ஏற்றதான மற்றும் மோக்ஷம் அடைவதற்கான பலன் என்றும் கூறப்படுகிறது. அதனாலேயே எம்பெருமானை ''ச்ரிய:பதி'' என்றும், பெரிய பிராட்டியை, ''விஷ்ணு பத்நீ'' என்றும் அழைக்கிறோம். புருஷ ஸூக்தத்தில், ''ஹ்ரீ'' எனப்படும் பூமிபிராட்டியும், லக்ஷ்மியும் எம்பெருமானுடைய பத்நிகள் என்பதை ''ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ் ச பத்ந்யௌ'' என்ற வரியில் காணலாம்.

பெரிய பிராட்டியின் பெருமையை, மஹிமையை, மேன்மையை, வேத வாக்யங்களிலிருந்தும், இதிஹாஸ புராணங்களிலிருந்தும், ஆழ்வார், ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்தியிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்,

**தோற்றம்**

எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணன் ஸாதுக்களை ரக்ஷிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும், அதர்மத்தை அழிக்கவும் அவ்வப்போது தன் ஸங்கல்பத்தால் அவதாரம் எடுக்கிறான். அதுபோல் பிராட்டியும் தோன்றுகிறாள், ஆனால் இருவருடைய அவதாரத்திலும் சிறிது வித்யாஸம் உண்டு! இன்னாருக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று ஸங்கல்பிக்காதபடி, பிராட்டி தானாகவே தோன்றுகிறாள்!. அயோநிஜையாகத் தோன்றுகிறாள்! திருப்பாற்கடலைக் கடைந்தபோது, பெண் அமுதாகத் தோன்றி எம்பெருமானின் திருமார்பைத் தனக்கு வாஸஸ்தலமாகக் கொண்டாள். ஜனகர் பூமியை உழுதபோது, நிலத்தில் தோன்றினாள் ஸீதையாக வந்த பிராட்டி. இப்படி அயோநிஜையாகத் தோன்றிய பெருமை பிராட்டிக்கு உண்டு.

**பிராட்டியின் தன்மை**

''ஸ்ரீ'' என்னும் பெரிய பிராட்டி, உருக்கின தங்கம் போன்றவள். தாமரை போன்ற திருக்கண்களை உடையவள். அழகானவள்; அன்பின் இருப்பிடம்; கருணைக்கடல்; காருண்ய தேவதை; பொறுமையின் இலக்கணம்; சாந்த ஸ்வரூபி; ஜகந்மாதா'' என்றெல்லாம் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் இவளைப் பற்றி, வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்துதியில் ஸ்வாமி தேசிகன் இவளை இந்த ப்ரபஞ்சத்துக்கு ஈச்வரி என்றும் லக்ஷ்மீ, பத்மா, ஜலதி தனயா. விஷ்ணுபத்னி. இந்திரா முதலிய திருநாமங்களால் இவள் அழைக்கப்படுகிறாள் என்றும் போற்றுகிறார்.

பத்மாவதி, கமலா, அம்புஜா, பங்கஜா என்றெல்லாம். தாமரையை வைத்தே லக்ஷ்மிக்கு மேலும் பல திருநாமங்கள் உள்ளன. எப்படி திருத்துழாய் என்ற பெயரைக் கேட்டவுடன் ஸ்ரீமந் நாராயணன் உகந்து அணியும் மாலை என்பது நம் நினைவுக்கு வருகிறதோ, அதுபோல, ''தாமரை'' என்ற பெயர் கேட்டதும், அதில் வீற்றிருக்கும் பெரிய பிராட்டியின் நினைவு வருவதில் ஆச்சர்யமில்லை.

ஸ்ரீ ஸூக்தத்தில் அனுஸந்திக்கப் படும், ''பத்மப்ரியே... ஸந்நிதத்ஸ்வ'' என்ற மந்திரத்தின் பொருளாக, ''தாமரையில் வசிப்பவளும், பெண்களுக்குள் உயர்ந்தவளும், தாமரையைக் கையில் ஏந்தியிருப்பவளும், தாமரையில் வீற்றிருப்பவளும், தாமரை இதழை ஒத்த திருக்கண்களை உடையவளும், எல்லோரிடமும் அன்புள்ளவளும், விஷ்ணுவின் திரு உள்ளத்திற்கு ஒத்திருப்பவளுமான மஹாலக்ஷ்மி'' என்ற விளக்கங்கள் காணப்படுகிறன.

**மிதுன சேர்த்தி**

எல்லா ஆழ்வார்களும் தங்கள், பாசுரங்களில் எம்பெருமானைக் குறிப்பிடும் பொழுது, 'திருமால், திருமகளார் தனிக்கேள்வன், திருமார்வன், திருவின் மணாளன், ஸ்ரீதரன் என்று எல்லா இடங்களிலும் திருவுடன் இணைந்தவன் இவன் என்பதுடன் திவ்ய தம்பதியாகிய இவர்களே நமக்கு சரண் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ''அகலகிலேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா' என்று பிராட்டியும் பெருமானும் இணைபிரியாதிருப்பவர்கள் என்று 'திருவாய்மொழியில் ஸ்வாமி நம்மாழ்வார் அருளியுள்ளார்.

ஸ்ரீ தேசிகனும், தாம் அருளிச்செய்த ஸ்ரீஸ்துதி என்ற ஸ்தோத்ரத்தில் (4), ''யத் ஸங்கல்பாத்... பாத-லாக்ஷாரஸாங்கம்'' என்று அருளிச்செய்கிறார். உலக நாயகனான எம்பெருமானின் திருமார்பில் செம்பஞ்சுக் குழம்பினாலான பிராட்டியின் பாத இலச்சினை ஒளியுடன் திகழ்கிறது'' என்கிறார்! இது ஸர்வேச்வரன் இவனே என்று காட்டித்தரும் ஒரு அடையாளமாக இருப்பதை உணர்த்தும் வண்ணம் அமைந்தது என்கிறார்! பேயாழ்வாரும் இவளையிட்டே எம்பெருமானைக் கண்டுகொண்டதாக ''திருக் கண்டேன்'' பொன் மேனி கண்டேன்'' என்று பாசுரம் இட்டுள்ளார்,

''திருவில்லாத் தேவரைத் தேறேன்மின்'' என்கிறார் மழிசையர்கோன்! ''ஸ்ரீ'' இன்றி நாரணன் இல்லை என்ற இக்கருத்தை ஒட்டியே ஆழ்வார்கள் பலரும் தங்கள் பாசுரங்களில் பேசுவதைக் காணலாம். ''மடவாளை மார்பில் கொண்டாய் மாதவா'' என்றும் ''வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு'' என்றும் ''செய்யாள் உறை திரு மார்பன்'' என்றும் ''கமலையுடன் பிரியாத நாதன்'' என்றும் ''ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப'' என்றும், இது போன்று பல ஆழ்வார் பாசுரங்களில் மட்டுமின்றி ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிலும் காணலாம்.

உலகில் எங்கெல்லாம் புருஷ பாவம் உள்ளதோ அங்கெல்லாம், விஷ்ணு இருக்கிறார், அது போல, எங்கெல்லாம் ஸ்த்ரீ பாவம் உள்ளதோ அங்கெல்லாம் பிராட்டி இருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

எம்பெருமானின் ஐந்து நிலைகளிலும் பெரிய பிராட்டி உடன் எழுந்தருளி உள்ளாள். விபவ அவதாரத்திலும் இவள் பகவானைப் பிரிவதில்லை, எம்பெருமான் ஸ்ரீராமனாக அவதரித்த போது, பிராட்டி சீதையாகத் தோன்றினாள்; அவன் க்ருஷ்ணனாக அவதரித்த போது, ருக்மிணியானாள்.

திருக்கோவில்களில் எம்பெருமானின் அர்ச்சை திருமேனிகளிலும் திருமார்பில் தாயாரை நாம் ஸேவிக்கிறோம்!. திருமகள் வஸிக்கும் இடமெல்லாம்

| பங்குனியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **பங்குனி உத்தரம்**<br>திருக்கல்யாண உத்ஸவம்<br>மார்ச் 18 (வெள்ளி) |
| **ஊர்கோல உத்ஸவம்**<br>மார்ச் 19 (சனி) |
| **யுகாதி உத்ஸவம்**<br>ஏப்ரல் 2 (சனி) |
| **ஸ்ரீராமர் உத்ஸவம் (9 நாட்கள்)**<br>ஏப்ரல் 2 (சனி) முதல் 10 வரை (ஞாயிறு) |
| **ஸ்ரீராமநவமி**<br>ஏப்ரல் 10 (ஞாயிறு) |
| **ஸ்ரீராம பட்டாபிஷேகம்**<br>ஏப்ரல் 11 (திங்கள்) |

நம் வணக்கத்திற்குரியவை. அதனால்தான் அவள் தோன்றிய திருப்பாற்கடலை திவ்யதேசமாக வணங்குகிறோம்.

**பெரிய பிராட்டியின் பெருமை:** இதனை ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விரிவாகக் காணலாம். இவள் உலகுக்கெல்லாம் தாய், நித்யமாய் இருப்பவள், விஷ்ணுவை விட்டுப் பிரியாதவள், விஷ்ணுவைப் போல் எங்கும் ஸ்வரூபத்தால் வியாபித்திருப்பவள், ஜகத்தை ஸ்ருஷ்டிக்க பெருமாளுக்கு உதவுபவள், மோக்ஷமளிப்பவள்'' என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், ''ஸமஸ்த ஜனனீம் வந்தே என்ற தயா சதகம் 6-ம் ச்லோகத்தில் ஸ்ரீ தேசிகன், ''கருணை வடிவு கொண்டவளாகவும், அகில லோகங்களுக்கும் அன்னையாகவும், எல்லா மங்களங்களுக்கும் நிதியான ஸ்ரீநிவாஸனுக்கும் நலம் தரும் நங்கையாகவும்'' பெரிய பிராட்டியை வர்ணிக்கிறார்.

எம்பெருமானுக்குள்ள ஆறு குணங்களான ஞான, பல, ஐஸ்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்பவை பிராட்டிக்கும் உணடு. அவன் பகவான் என்றும் இவள் பகவதி என்றும் அழைக்கப்படுகிறார்கள். இந்த்ரன் பெரிய பிராட்டியைத் துதிக்கும் போது, ''நீ உலகுக்கெல்லாம் தாயாக இருக்கிறாய்; தேவர்களுக்கெல்லாம் தந்தை ஹரி; அண்டச ராசரங்களெல்லாம் உன்னாலும், விஷ்ணுவாலும் வ்யாபிக்கப் பட்டுள்ளன'' என்று கூறுகிறான், இதை விஷ்ணு புராணத்தின் ''த்வம் மாதா... சராசரம்'' (1-9-26) என்ற வரிகளின் மூலம் அறியலாம். மேலும், ''யஸ்யாம் யஸ்யாம்... ஸம்பதோகா'' என்ற ஸ்ரீஸ்துதி (15) ச்லோகத்தின் மூலம், ''உன் திருக் கண்கள் எந்தெந்த திசையில் திரும்பி விளையாடுகிறதோ, அங்கெல்லாம் செல்வங்கள் போட்டியிட்டு வெள்ளமிடுகின்றன'' என்று ஸ்ரீ தேசிகன் பிராட்டியின் பெருமையைப் பேசுகிறார்.

''ஹ்ருஷீகேசன் கருணை வடிவமாய் உள்ள லக்ஷ்மியுடன் சேர்ந்து, உலகத்தை ரக்ஷிக்கிறான்'' என்ற வாக்கியம் எல்லா உபநிடதங்களிலும் காணப்படுகிறது.

''ஸ்ரீ'' என்ற பதத்திற்கு ஆறு அர்த்தங்கள் உள்ளதாக, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும், லக்ஷ்மீ தந்த்ரம் என்ற நூலிலும் காணப்படுகின்றன. அவை ''ஸகல ஜீவராசி களாலும் அடையப்படுகிறாள், ஸகல ஜீவன்களின் பொருட்டு பகவானைத் தான் அடைகிறாள், ஜீவர்களின் அவலக் குரலைக் கேட்கிறாள், அவர்களின் ப்ரார்த்தனையை எம்பெருமான் கேட்குமாறு செய்கிறாள், அதுபோல் பகவான் கூறிய வார்த்தைகளையும் ஜீவர்கள் கேட்குமாறு செய்கிறாள், தன்னை அடைந்தவர்களின் பாபங்களைப் போக்கி அவர்களுக்கு நல்ல குணங்களையும், மங்களங்களையும் அளிக்கிறாள் என்பவையாகும்.



இனி பிராட்டியின் ப்ரபாவத்தை ஆசார்யர்கள் அருளிய சில ஸ்ரீஸூக்திகள் மூலம் காணலாம்.

ஸ்ரீ ஆளவந்தார், தாம் அருளிச் செய்த சது: ச்லோகியில் தாயாரின் பெருமையை வெகு அழகாக ஸ்தாபித்துள்ளார். முதல் ச்லோகத்தில் பிராட்டியின் பரத்வமும், 2ம் ச்லோகத்தில், பிராட்டி செய்யும் புருஷகார வைபவமும், 3-ம், 4-ம் ச்லோகங்களின் மூலம், மோக்ஷம் அடைய விரும்பும் சேதனர்களுக்கு இவள் உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கும் தன்மையை வர்ணிக்கிறார். பெருமான் தன் மஹிமையை அறியாதது போலவே பிராட்டியும் தன் மஹிமையை அறியாமல் இருக்கிறாள் என்கிறார். மேலும், எம்பெருமானைப் போலவே, பிராட்டிக்கும் திவ்யாத்ம ஸ்வரூபம், பக்தர்களை வசப்படுத்தும் திவ்ய மங்கள விக்ரஹம், பகவானின் விபவ, அந்தர்யாமி, அர்ச்சை ரூபங்களுக்கு ஏற்ப பிராட்டிஎடுக்கும் ரூபங்களும் இருக்கின்றன'' என்று சாஸ்த்ரத்தில் கூறியுள்ள கருத்தை விளக்கியுள்ளார். ஆளவந்தாரை அடியொற்றியயே பின் வந்த ஆசார்யர்களும் தங்களின் ஸ்ரீஸூக்திகளில் இக்கருத்தையே வலியுறுத்துகின்றனர்.

ஸ்ரீராமானுஜர் சரணாகதி கத்யத்தில் முதலில் ''பகவந் நாராயண'' எனத்தொடங்கி பிராட்டியை பலவாறு போற்றி அவள் உலகுக்கெல்லாம் தாயாக இருப்பதைக்கூறி அவளைச் சரணம் அடைகிறார்.

ஸ்ரீகூரத்தாழ்வான், ஸ்ரீஸ்தவத்தில், ''உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மற்றும் நரகம், மோக்ஷம் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் பகவான், பெரிய பிராட்டியின் திருமுக மண்டலத்தைப் பார்த்து,

இவளுக்குக் கட்டுப்பட்டு செயல்படுகிறான்'' என்று கூறுகிறார்.

ஸ்ரீபராசர பட்டர், ஸ்ரீ குணரத்ந கோசத்தில் (28), ''பகவானுடைய ஸ்வரூபமும், ஸ்வதந்த்ரத் தன்மையும், உனது ஸம்பந்தத்தினாலேயே உண்டாகின்றன; அவனுடைய சிறப்பிற்கு நீயன்றோ காரணம்'' என்று அருளியுள்ளார்.

**பிராட்டியின் மூன்று வகை ஆகாரங்கள் (செயல்கள்)**

1) புருஷகாரம், 2) உபாயமாயிருத்தல், 3) உபேயமாயிருத்தல்.

1) **புருஷகாரம்:** தண்டதரனான பகவானிடம் சேதனர்களுக்காகப் பரிந்து பேசி, தன் கருணையாலும் வாத்ஸல்யத்தாலும் அவர்களின் குற்றங்களைத் தள்ளி அருள்புரியும் படி புருஷகாரம் செய்கிறாள் ஸ்வாமி தேசிகனும் அனுக்ரஹமே வடிவெடுத்தவளான இவள் எம்பெருமானிடம் தனக்குள்ள உரிமையாலும், அவன் தன் வார்த்தையை மீறமாட்டான் என்ற திட நம்பிக்கையாலும், ஜீவன்களுக்காகப் பரிந்து பேசி பெருமாளின் கோபத்தைப் போக்குகிறாள்'' என்கிறார்.

ஸ்ரீபிள்ளைலோகாசார்யர், ஸ்ரீ வசந பூஷணத்தில், பிராட்டியைப் பற்றி, ''சேதனரை அருளாலே திருத்தும் ஈச்வரனை அழகாலே திருத்தும்'' என்று கூறியுள்ளார். இவள் ஸந்நிதியில் காகம் தலைப் பெற்றது; அது இல்லாததால், ராவணன் முடிந்துபோனான் என்கிறார்!

இவளது புருஷகாரம் பற்றி, ஸ்வாமி தேசிகன், ''ஜீவர்களின் கர்மாக்களுக்குத் தக்கவாறு பகவான் பலன் அளிக்கையில், பிராட்டி இருவிதமாக செயல்படுவதாகக் கூறுகிறார். பாபிகளின் பாபபங்களை மன்னிக்கச் செய்வது மட்டுமன்றி, புண்ணியம் செய்தோர் மீதும், அவன் அனுக்ரஹத்தைப் பலமடங்காக ஆக்குகிறாள்'' என்கிறார். இக் காரணங்களினால்தான், முதலில் பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு நாம் பெருமாளிடம் சரணடைகிறோம்.

2) **மோக்ஷத்திற்கு நேர் உபாயமாதல்:** தாயார் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவள்; ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்கு உதவி செய்பவள்; ஆத்ம வித்யையும், மோக்ஷத்தையும் அளிப்பவள் என்று விஷ்ணு புராணத்தில் குறிப்பு உள்ளது,

ஆழ்வார்களும் தங்கள் ஸ்ரீஸூக்திகளில் இதையே அருளிச் செய்துள்ளனர். திருவாய்மொழி ''வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே'' என்று மொழிகிறது.

3) **உபேயமாதல்:** இவள் அடைய வேண்டியவளாக, கைங்கர்யம் செய்யப்பட வேண்டியவளாகவும் இருக்கிறாள். எம்பெருமானை விட்டு க்ஷணமும் பிரியாதிருப்பதுடன், எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யத்தைத் தானும் ஏற்கிறாள். இந்த சேர்த்தியே நமக்கு உத்தேச்யம். இருவருக்குமான சேர்த்தியிலேயே அடிமை செய்தல் முறை என்பது ஸ்வாமி தேசிகன் கூற்று. ஸ்ரீஸ்துதி 6-ம் ச்லோகத்தில் ''சரணாகதி செய்யும் போது, நீங்கள் இருவருமே ஒருமித்த தேவதைகளாய் இருக்கிறபடியால், நீங்கள் இருவருமே அடைய வேண்டியவர்களாகிறீர்கள் – உத்தேச்யர்கள்'' என்கிறார்.

ஸ்ரீ வைகுண்டத்தில், எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்தே நித்ய, முக்தர்கள் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். நாமும் திருக்கோயிலுக்குச் செல்லும்போது, பெருமாள் ஸந்நிதிக்கிச் செல்லுமுன், தாயாரை தெண்ட னிட்டு, பிறகே பெருமாளை ஸேவிக்கிறோம்.

''திருவுடனே திகழ்ந்தார் செறிந்தார் என் சிந்தையுள்ளே'' என்றபடி, இத்தகைய பெருமையும், மேன்மையும் வாய்ந்த ''ஸ்ரீ'' என்றும், மஹாலக்ஷ்மி என்றும், பெரிய பிராட்டி என்றும் போற்றப்படும் தாயாருடன் சேர்ந்த எம்பெருமான் நம் சிந்தையுள் என்றும் எழுந்தருளி அருள்புரிய திவ்ய தம்பதிகளையே ப்ராத்திப்போமாக! ✻


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஶ்ரீ:



*With Pranams:*

# Priya & T.R. Murali

Bengaluru

**SVDD thanks Smt. Priya & Sri T.R. Murali**
for sponsoring this month's issue of Desika Sandesam











ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் ஸங்கல்ப அர்ச்சனை









ஸ்ரீ:



ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ தந்வந்த்ரி மஹாவிஷ்ணவே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு,மயிலாப்பூர், சென்னை-600 004
☎2495 3799 / 4386 3747 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com

## உலக மக்களின் நன்மை வேண்டி ஸ்ரீ தன்வந்தரி ஹோமம்

**20.03.2022 – ஞாயிற்றுக்கிழமை**



நமது தேவஸ்தானத்தில், உலக மக்களின் க்ஷேமத்திற்காகவும், கொடிய வைரஸ் நோய் நிவர்த்திக்காகவும், **வைத்யராஜாவான ஸ்ரீ தன்வந்தரி ஹோமமும்,** அதற்கு அங்கமாக வேதபாராயணமும் நடத்திக்கொள்ள எம்பெருமான் திருவுள்ளம் பற்றியிருக்கிறான். மேற்படி ஹோமத்தை, நாளது **ப்லவ ஷூ பங்குனி மீ 6ம் தேதி (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை** நடத்த ஏற்பாடாகியுள்ளது. இவ்வைபவத்தில் ஆஸ்திகர்களும், பக்தகோடிகளும் பெருந்திரளாக ஸகல விதத்திலும் கலந்து கொண்டு மாமயிலை திவ்ய தம்பதிகள், ஸ்ரீ தன்வந்தரி மற்றும் ஸ்வாமி தேசிகன் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

### உற்சவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

*20.03.2022 – ஞாயிற்றுக்கிழமை*

காலை 8:00 மணி - ஸோமகும்ப, மஹாகும்ப திருவாராதனம், வேதபாராயணம், மஹா மந்த்ரங்கள் ஜபம்

**காலை 9:00 மணி - ஸ்ரீ தன்வந்தரி ஹோமம்**

காலை 11:30 மணிக்கு - மஹா பூர்ணாஹுதி, தீர்த்த, ப்ரஸாத விநியோகம்

---

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன், பழங்கள், புஷ்பங்கள், மூலிகை சாமான்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்

R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்